நாள்.02.12.2025

வா.சா.1. பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–

வாதி ராஜாவும், பிரதிவாதியும் 08.01.2021–ல் ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டார்கள் என்று சொன்னால் சரிதான். அந்த ஒப்பந்தத்தில் ஆறு மாத காலத்திற்குள் பதிவு செய்து கொடுக்க வேண்டும் என எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். சாட்சி கொரோனா காலகட்டத்தில் நாங்கள் பலமுறை பிரதிவாதியிடம் சொன்னோம். அதற்கு பிரதிவாதி பதிவு செய்து கொடுப்பதாக சொன்னார். கொரோனா காலக்கட்டம் என்பதால் பிரதிவாதி பின்னர் செய்து தருவதாக சொன்னார். எந்த வருடத்திலிருந்து கேட்டோம் என்றால் 08.01.2021 முதல் ஆறு மாதத்திற்கு பிறகு கேட்டோம். அவர்கள் ஒப்பந்தப்படி பின்னர் செய்து தருவதாக சொல்லியதன் அடிப்படையில் கால நீடிப்பு ஒப்பந்தம் ஏதாவது செய்து கொண்டிரீர்களா என்றால் இல்லை. கிரய ஒப்பந்தத்தில் நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேனா என்றால் இல்லை. ஒரு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தம் பதிவு செய்யப்பட்டு ஆறு மாத காலம் முடிந்த பிறகு அந்த ஒப்பந்தம் காலாவதியாகிவிடும் என்று தெரியுமா என்றால் தெரியும். 08.01.2021–லிருந்து ஆறு மாதத்திற்க்குள் பிரதிவாதிக்கு ஏதேனும் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பினேன். அந்த அறிவிப்பை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஒப்பந்தப்படி ஒப்பந்தம் ஏற்பட்டு ஆறு மாத காலத்திற்க்குள் நான் தயார் நிலையிலும், விருப்பத்துடனும் இருந்து இருந்தால், பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பி என்னுடைய தயார் நிலை மற்றும் விருப்பத்தை

தெரிவித்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. வாதியால் போடப்பட்ட கிரய ஒப்பதந்த்தில் பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் ரூபாய் 5 இலட்சம் தொகையினை கிரய சொத்தை பதிவு செய்து கொடுக்க இயலவில்லை என்றால் மேற்படி தொகையை திரும்ப கொடுத்து விடவேண்டும் என்று எந்த வாசகமும் ஒப்பந்த்தில் இல்லை என்றால் சரிதான். பிரதிவாதியின் மகன் கஜேந்திரன் என்பவர் மீது திருத்துறைப்பூண்டி விரைவு குற்றவியல் நீதிமன்றத்தில் 5–க்கும் மேற்பட்ட காசோலை மோசடி வழக்கு நிலுவையில் உள்ளது என்று சொன்னால் எனக்கு தெரியாது. பிரதிவாதியின் மகன் கஜேந்திரன் மீது இதே நீதிமன்றத்தில் தனலெட்சுமி ஸ்ரீனிவாசன் சிட்பன்ட் நிறுவனத்தால் தொடரப்பட்ட வழக்கு சமூகம் நீதிமனற்த்தில் நிலுவையில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதி மகன் கஜேந்திரன் என்னுடைய வங்கி கணக்கிற்கு பணம் வரவு வைத்துள்ளார் என்றால் இல்லை. பிரதிவாதி மகன் கஜேந்திரன் என்பவருக்கும் வாதிக்கும் கொடுக்கல் வாங்கல் இருந்தது அதை தீர்ப்பதற்காக பிரதிவாதியை பயீர்க்காப்பீடு செய்யவேண்டும் அதற்க்காக நிலத்தினை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்ய வேண்டும் என வாதியும் பிரதிவாதி மகன் கஜேந்திரனும் கூட்டாக ஏமாற்றி பிரதிவாதியை இந்த ஒப்பந்ததில் ஈடுபத்தியுள்ளீர்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதியிடம் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்ததில் சுவாதீனம் யாரிடம் இருக்க வேண்டும் என்று சொல்லப்படவில்லை என்றால் சரிதான். உண்மையிலையே இது போன்று ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டு இருந்தால் சொத்தினுடைய மதிப்பு

குறிப்பிடப்பட்டுறிக்கும் சுவாதீனம் யாரிடம் உள்ளது என்று குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. பிரதிவாதியை ஏமாற்றும் நோக்கத்தோடு போடப்பட்ட ஒப்பந்தம் என்பதால் ஒப்பந்தம் நிறைவேற்றபட்ட ஆறு மாதக் காலத்திற்க்குள் தாங்கள் தாயர் நிலையிலும், விருப்பநிலையிலும் இருப்பதை தெரிவித்து எந்த விதமான அறிவிப்பும் , பிரதிவாதிக்கு அனுப்பப்படவில்லை. அதேபோன்று ஒப்பந்த அடிப்படையில் கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் தொகையைப் பற்றியும் அதே திரும்ப செலுத்தும் விதம் பற்றியும் ஒப்பந்தத்தில் சொல்லப்படவில்லை. பிரதிவாதியை ஏமாற்றும் நோகத்தோடு செயல்படுத்தப்பட்ட ஒப்பந்தம் செல்லத்தக்கதல்ல. பிரதிவாதிக்கு தாவா சொத்தினை விற்க வேண்டும் என்ற நோக்கமும், தேவையும் இல்லை என்றாலும் சொத்தை பொருத்து இந்த விலைக்கு தான் விற்கிறோம், இந்த தேவைக்கு தான் விற்கிறோம் என்ற நோக்கம் இருக்க வேண்டும் என்ற சூழ்நிலையில் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம் செல்லாது என்றால் சரியல்ல. இந்த ஒப்பந்தம் நிலை நிற்க கூடியதல்ல. இந்த வழக்கை தள்ளுப்படி செய்ய வேண்டிய வழக்கு என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:- இல்லை.</u>**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.